**<u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 99/2004**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 02.12.2024 in accordance with the provision of Act 1 of 1873.

Name : கோபி Father's Name : கிருஷ்ணன் (எ) கிருஷ்ணசாமி

துவக்க நேரம்: 01.00 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1) எனது அய்யா கிருஷ்ணன்(எ) கிருஷ்ணசாமி ஆரம்பத்தில் வழக்கு போடும்பொழுது, தாவா சொத்துகளுக்கு நிரந்தர தடை உத்தரவு வேண்டி மட்டும் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.எனது அப்பா சர்வே எண்கள் 400/7,400/9 மற்றும் 400/10 ஆகிய சொத்துகளை சேர்க்ககோரி IA 1323/2017 ஒரு இடையீட்டு மனுவை தாக்கல் செய்து, அந்த மனு கடந்த 24.11.2022 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2) மேற்கூறிய இடையீட்டு மனு அனுமதிக்கப்பட்டபின், நான் அதனை தொடர்ந்து தாவாவை திருத்தம் செய்து, தாக்கல் செய்யப்பட்ட தாவா திருத்தப்பட்ட பிராதியில் பத்தி எண்.4a வில் மேற்படி 3 சர்வே எண்களையும் எனது பாட்டி சிவகாமிஅம்மாள் கடந்த 10.06.1933 தேதியில் கிரையம் வாங்கிப்பட்ட சொத்துகளுடன் சேர்த்து, நீடானபோகத்தில் அனுபவித்து வந்ததாக கூறிப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3) மேற்படி சங்கதிகளை எனது அப்பா, முதலில் தாக்கல் செய்த வழக்கில் இந்த விவரங்களை சொல்லவில்லை என்றால் சரிதான். அப்பொழுது அந்த சர்வே எண்கள் விடுப்பட்டு இருந்தது எங்களுக்கு தெரியாது. திருத்தப்பட்ட வழக்குரையில், விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரியல்ல கேட்டுள்ளேன்.

4) IA 2/2023 என்ற இடையீட்டு மனு அனுமதிக்கப்பட்டபிறகு, தாக்கல் செய்த திருத்தப்பட்ட வழக்குரையில், IA 2/2023 ல் திருத்தப்பட்ட வழக்குரையில், இந்த விவரங்களை நான் வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் வழக்கு தாக்கல் செய்தபொழுது, சொத்தின் மதிப்பு என்ன இருந்ததோ அதற்கேற்றவாறு மதிப்பீடு இருந்ததால் திருத்தம் செய்யவில்லை.

5) அதன் பிறகு மீண்டும் IA 6/2024 என்ற இடையீட்டு மனுவை தாக்கல் செய்து, அது கடந்த 01.10.2024 அன்று அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். அதன்பிறகு நான் தாக்கல் செய்த திருததப்பட்ட வழக்குரையில், A பத்தியில் கடந்த 1933 ல் சிவகாமியம்மாள் வாங்கிய அனைத்து சொத்துகளுக்கும் சேர்த்துதான் விளம்புகை பரிகாரம் கோரியள்ளேன் என்றால் சரிதான். ஆனால், எந்தெந்த சர்வே எண்களுக்கு பரிகாரம் கேட்டுள்ளேன் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். நான் மேற்கூறியவாறு திருததப்பட்ட 3 சர்வே எண்களை குறிப்பிட்டு பரிகாரம் கோரி, திருத்தப்பட்ட வழக்குரை தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன்.

6) எனது அப்பா தாக்கல் செய்த தாவா சொத்தின் சர்வே எண்கள் 399/05 ல் 0.03 ஏர்ஸ், 399/14 ல் 0.09.5 ஏர்ஸ், 399/16 ல் 0.09.0 ஏர்ஸ், 399/12 ல் 0.07.5 ஏர்ஸ்

நிலத்தில் உள்ள கிணறு ஒன்றில் 1/6 பங்கு ஆகிய நிலங்களை நானும், எனது அப்பாவும் சேர்ந்து, கடந்த 07.12.2017ல் ஒரு பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலம் இராமசாமி செட்டியார் மகன் ரஜினி என்பவருக்கு கிரையம் செய்துகொடுத்துள்ளோம் என்றால் சரிதான். தாவா சொத்திற்கும், நான் கிரையம் செய்து கொடுத்த நிலத்திற்கும் சம்பந்தமில்லை. கடந்த **07.12.2017** பதிவு செய்யப்பட்ட மின்னனு நகல் பிரதிவாதி தரப்பு சான்று ஆவணம் **1 (Ex.B1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.**

7) மேற்படி ரஜினி என்பவருக்கு விற்றகப்பட்ட 4 சர்வே எண்களில் உள்ள நிலங்களும் விற்கப்பட்ட தேதியிலிருந்து அவருடைய சுவாதீனத்தில்தான் உள்ளது என்றால் சரிதான். நான் கடந்த 2017 Ex.B1ல் குறிப்பிட்ட சொத்துகளை விற்பனை செய்தபிறகும், இந்த தாவாவில் அந்த சொத்துகளை சேர்த்தும் பரிகாரம் கேட்டு, திருத்தப்பட்ட வழக்குரை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். இதுநாள்வரை அந்த சர்வே எண்களை வழக்குரையிலிருந்து நீக்கம் செய்ய எந்த நடவடிக்கையும் செய்யவில்லை என்றால் சரிதான்.

8) வழக்கில் சொல்லாத விவரங்களை நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில், 2 மற்றும் 8 வது பத்தியில் சொல்லியுள்ள விவரங்களை பற்றி என்னுடைய வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. IA 2/2023 மனுவின் மூலம் சேர்க்கப்பட்ட சர்வே எண்கள், எனது பாட்டி சிவகாமியம்மாள் 1933 ல் கிரையம் வாங்கிய கிரைய பத்திரத்திலேயே எதெச்சையாகவும், கவனக்குறைவாகவும் விடுப்பட்டது என்ற விவரத்தை முதன்முதலாக நான் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில்தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆணையர் மூலமாக அளந்துபின்புதான் எந்தெந்த சர்வே எண்கள் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரிய வந்தது. நான் மேற்கூறிய விவரத்தை நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

9) மேற்படி விடுப்பட்ட 3 சர்வே எண்கள் குறித்த விவரம் எனக்கு எப்பொழுது தெரியவந்தது என்றால் எனது அப்பா கடந்த 2023, ஆகஸ்ட் மாதத்தில் இறந்தபிறகு, நான் ஆணையர் அறிக்கையை படித்தபிறகுதான் எனக்கு தெரியவந்தது. மேற்படி விடுப்பட்ட சொத்துகளை சார்பதிவாளர் பதிவேட்டில் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டி எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றாலும், அதுகுறித்து நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்றாலும் சரியல்ல. அதற்காகதான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம்.

10) நான் வழக்குரையில் சொல்லாத விவரங்களை குறித்து சாட்சியம் அளிக்க உரிமையில்லை இல்லை என்றாலும், பரிகாரம் கோராமலும், அதற்கான நீதிமன்ற கட்டணம் செலுத்தாமலும், சாட்சியத்தில் மட்டும் பரிகாரம் கோர உரிமையில்லை என்றால் சரியல்ல.

11) வழக்கின் 2 ம் பிரதிவாதியான சிவசுப்ரமணியம் கடந்த 04.03.2024 அன்று ஒரு கூடுதல் பதிலுரையும், அதனுடன் சில ஆவணங்களும் தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண்கள்.400/07, 400/09, 400/10 ஆகியவற்றில் உள்ள சொத்துகள் பதிவு செய்யப்பட்ட விடுதலை பத்திரத்தின் மூலம் 1 ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். ஆனால் அவருக்கும் அந்த நிலத்திற்கும் சம்பந்தமில்லை. உரிமையில்லாத சொத்துகளை எழுதி வாங்கியுள்ளார். விடுதலை பத்திரம் போலியானது என்று நான் சொல்லும நிலையில், அதனை இரத்து செய்ய நான் ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றாலும், இந்த ஆவணம் செல்லதக்கதல்ல என்று பரிகாரம் ஏதேனும் இந்த வழக்கில் கேட்டுள்ளேனா என்றால் இந்த ஆவணம் குறித்து வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதால், நான் மேற்கண்ட விடுதலை பத்திரத்தின்மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை,

பரிகாரமும் கோரவில்லை. கடந்த 11.10.1993 தேதியிட்ட விடுதலை பத்திரம் குறித்து, போலியானது என்றோ, மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றோ, இந்த வழக்கில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளேன்.

12) 2ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள கூடுதல் பதிலுரையில், 2ம் பிரதிவாதி கூறியுள்ள சங்கதிகள் தவறு என்று என்தரப்பில் நான் ஏதேனும் மறுப்பு பதிலுரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பாக பாத்திய விடுதலை பத்திரம் பதிவு செய்யப்பட்ட பத்திரம் என்றால் சரிதான். சர்வே எண்கள் 400/7, 400/9 மற்றும் 400/10 ஆகிய சர்வே எண்களோடு மேலும் 2 சர்வே எண்கள் குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.இந்த ஆவணம் ஏற்படுத்தியது பற்றி எனக்கு தெரியாது. எதனடிப்படையில், பாகம் பாத்திய விடுதலை பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்று தெரியாது.

ஆவணங்கள் பரிசீலிக்க வேண்டி, குறுக்கு விசாரணை ஒத்திவைக்க வேண்டுகோள்விடுக்கப்பட்டது, வேண்டுகோள் ஏற்கப்பட்டு, குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 02.00 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

sd/-S.Munusamy
Principal Distrit Munsif, Attur

Typed - O.S. No.99/2004, Dt.02.12.2024.